மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் கார்த்திகைத்திங்கள் 29 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்543/22-ல்**

**அசல் வழக்கு எண். 26/2022**

மகாராணி .... மனுதாரர்/1-ம் பிரதிவாதி

**// எதிர்//**

கலைச்செல்வி ....எதிர்மனுதாரர்/வாதி

1. குருமூர்த்தி
2. சங்கீதா
3. உதயசூரியா
4. தெய்வானை
5. ராஜ்மோகன்
6. மகேந்திரன்
7. சார்பதிவாளர், உள்ளிக்கோட்டை
8. மாவட்ட ஆட்சியர், திருவாரூர். ......2 முதல் 9 பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பாண்டிதென்னவன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. கந்தசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, கடந்த 01.09.2022 ம் தேதியன்று ஏற்பட்ட எதிரவரில்லா உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியில் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

இம்மனுவில் மனுதாரர், அசல் வழக்கின் 1-ம் பிரதிவாதி ஆவார். மனுதாரர் மற்றும் 2 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்/வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு கடந்த 01.09.2022 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தத நிலையில், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், வழக்குரைஞரை சந்தித்து தகவல் தர முடியவில்லை. 2 முதல் 9 பிரதிவாதிகள் வேலையின் காரணமாக வெளியூரில் இருப்பதால், மனுதாரர் அசல் வழக்கை கவனித்து வருவதால் கடந்த 01.09.2022 அன்று ஏற்பட்ட எதிரவரில்லா உத்தரவை ரத்து செய்ய வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3.**எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :-

மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் உண்மை நிலவரப்படிக்கும், நிலைநிற்க கூடியதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

மனுதாரர்கள் இந்த மனுவினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்திலும், இந்த எதிர்மனுதாரருக்கு வீண் மன உளைச்சலை கொடுக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்திலும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**<u>தீர்வு :-</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை மற்றும் வழக்குகோப்புகள் ஆகியவை கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

2. இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

3. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதை பரிசீலிக்கும்போது, மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்களிலிருந்து அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக போடப்பட்டிருந்தபோது மனுதாரர் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் மீண்டும் வழக்கில் ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள போதும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அவர்களது தரப்பு கட்சியை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதால் நீதியின் நலன் கருதி உரிய நிபந்தனையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு

செய்கிறது.

**முடிவில்,** மனுதாரர்/1ம்பிரதிவாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகையாக ரூ. 500/-ஐ செலுத்திவைக்க வேண்டும் என்று இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (15.12.2023) அவையறியப் பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி. (மு.கூ.பொ)

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

(S/d.A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி. (மு.கூ.பொ)